**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு**
**சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்கள் அருளியது**

# திருமந்திர ஓலைநாயகம்
# விடுக்கும் அருளாட்சித் தாக்கீது

ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞாஞச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 தை மாதம்.**

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

**காணிக்கை: ரூ 10/-**

# <u>உள்ளுறை</u>

1. **“திருமந்திற ஒலைநாயகம் விடுக்கும் அருளாட்சித் தாக்கீது”** - 23/12/1985இல் குருதேவர், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களின் அருளாணை பெற்று, திருமந்திற ஒலைநாயகம் அவர்கள் அனைத்து அடியான், அடியாள், அடியார்களுக்கும் விடுக்கும் அருளாட்சித் தாக்கீது.

2. **“அவசர அவசியச் செயல்விளக்கக் கண்டிப்புக் குருவாணை”** - 30/12/1985இல் குருதேவர் அவர்கள் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு விடுத்த விரிவான குருவாணை அஞ்சல்.

3. **“இந்துமதம் பற்றிய தவருன கருத்துக்களுக்கு வன்மையான கண்டிப்பும் வருத்தமும்”** - ‘இந்துமதம் அழைக்கிறது’ என்ற பத்திரிக்கைக்கு மதுரை அடியான், அடியாள்கள் விடுத்த விளக்க அஞ்சல்.

---

**“Religion is the History of human civilisation”, “Mysticism and Medicine are the eyes of Man”, “Mythology is the encyclopaedia of human life and growth”. “Temple is the Museum of the Cosmic Universes and Celestial things”, “Spiritualism and Materialism are the two sides of a coin”, “Service to the poor working clan is the true and sincere service to God”, “<u>Jainism, Buddhism, Christianity and Islam are the Four gateways to enter into the temple of Siddharism</u>”...**

*- Taken from the writings of His Holiness Siddhar Kakapusundar M.P.Pillai.*

# திருமந்திற ஓலைநாயகம் விடுக்கும் அருளாட்சித் தாக்கீது

**அருளுலக இருளகற்றும் சித்தர் நெறிச் செல்வர்களுக்கு திருமந்திற ஓலைநாயகம், அரியவாள், பரமாச்சாரியார், பதினெண்சித்தர் சிவசத்தி பீடாதிபதி, வீரமாகாளி சன்னிதானம், அ.வி.தி. தலைமைச் செயலாளர் சித்தரடியான் நெ.சேவுகன் அருளாணையும் திருவாணையும் பெற்று விடுக்கும் அருளாட்சித் தாக்கீது.**

(1) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் பூசாவிதிகளையும், மொழிகளையும், நெறிகளையும், முறைகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் 'திருமந்திற ஓலைநாயகம்' என்ற ஒருவரை உருவாக்கியே அவர் மூலம் உலகுக்கு வழங்குவர். அதேபோல இக்காலத்தில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் தமது காலத்தில் திருமந்திற ஓலைநாயகத்தைத் தேர்ந்தெடுத்து உருவாக்கி அவர் மூலம் பூசாவிதிகளையும், மொழிகளையும், நெறிகளையும், முறைகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் உலகுக்கு வழங்கி வருகிறார். எனவே, அருளாணை பெற்றவர்கள் தங்களின் பூசைகளில் திருமந்திற ஓலைநாயகம், பதினெண்சித்தர் சிவசத்தி பீடாதிபதி, பத்தர், பத்தியார், போத்தர், போத்தியார், (புத்தர்), அருளாட்சி ஓலைநாயகம், போகர் சன்னிதானம், அரியவாள், வீரமாகாளி சன்னிதானம், அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலாளர், பரமாச்சாரியார் நெ.சேவுகன் வழியாக அருளூறு வாசகங்கள் பெற்றே தங்கள் பூசையினைத் துவக்கியிருப்பதாக, தொடர்ந்து பூசைகளைச் செய்வதாக அறிவிப்புச் செய்தேயாக வேண்டும். அதுதான் அருளுலக ஒப்புதல்களைப்

பெற்றுத் தரும். - என்று ஞாலகுரு சித்தர் கருவூறூர் அவர்களால் 7-4-1984இல் திருவாணையாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

(2) ஒவ்வொரு அ.வி.தி. நிலையத்திலும் நாம் யாகங்கள் செய்து மக்களுக்கு அநுபவப் பூர்வமாக நலன்களை விளைவித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு முக்கிய அங்கமாக ஒவ்வொரு அ.வி.தி. செயல் ஒழுங்கு கண்காணிப்புப் பொறுப்பாளர்கள் செயல்படுத்த வேண்டிய முக்கியக் கடமைகளைத் தெரியப்படுத்துகின்றோம். அதாவது, அ.வி.தி. நிலையத்தில் யாகம் நடக்கும் முன் சுமார் 2 மணி நேரத்திற்கு முன்பு அந்தந்த அ.வி.தி. நிலையங்களுக்கு அருகில் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப எந்தெந்தச் சுடுகாடுகள் இருக்கின்றனவோ அவற்றிலிருந்து நெருப்புச் சட்டி எடுத்து வந்து அ.வி.தி. நிலையத்தில் யாகத்தை அந்த நெருப்பைக் கொண்டு துவக்க வேண்டும். இதன் மூலம் பேய்கள், மந்திரவாதிகளின் தாக்குதல்கள், விதி, ஊழ்வினை, கண்ணேறு, மனித - தெய்வ சாபங்கள் .... முதலிய பாதிப்புக்கள் படிப்படியாகக் குறையத் தொடங்கும்.

(3) ஒவ்வொரு அடியான், அடியாள், அடியார்களும் தாம் செல்லும் 48 வகையான வழிபாட்டு நிலையங்களிலும் நின்று கீழ்க்கண்ட வாசகத்தைக் கூறிப் பூசைகள் செய்ய வேண்டும்.

“சுடுகாடு, இடுகாடு, புதைகாடு, நன்காடு, விடுகாடு, நடுக்காடு, மலைமுகடு, .................., .................., .................., ஆற்றிடைக் குறை, நீர்நிலைகள், .................., கடலிடைத் தீவுகள், கடல், .................., .................. இங்கெல்லாம் வாழும் உருவ, அருவ, அருவுருவத்தினர் அனைவருக்கும் அண்டப் பெருவெளி வாழும் பதினெண்சித்தர்களின் வாரிசுகள் இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், அரசயோகி, அண்டபேரண்ட

ஆதிசத்திகள் சன்னிதானம், இந்துமதத் தந்தை, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் அமைக்கும் அருளாட்சிப் பணிக்கு உடனடியாக உடனிருந்து எல்லாவிதமான உதவிகளையும், பாதுகாப்புக்களையும் வழங்கி வெற்றியைத் தேடித் தந்தருள வேண்டிக் கொள்கிறோம். தீமைகளைத் தடுத்து, நன்மைகளை உண்டாக்க வேண்டுகிறோம். -"

என்று உரத்த குரலில் அல்லது வாய்ப்பு வசதிப்படி அறிவித்துக் கொள்ள வேண்டும். இதன்மூலம் நாம் உருவ, அருவ, அருவுருவத்தினர் அனைவர் ஆதரவையும் பெற இயலும். [*இந்தப் பத்தியில் சில சொற்கள் நகலில் அழிந்திருந்தன.*]

(4) ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் அருளாட்சி அமைக்கப் போகும் இக் கலிகாலத்தில் அனைத்து விதமான சுடுகாடுகளுக்கும் நமது கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள், உலக அருளாளர்கள் .... முதலியோர்கள் அருளாணைகளை வழங்க ஆரம்பித்து விட்டார்கள். நமது அருளாட்சிக்கு முதற்படியே சமய, சமுதாய விரோதிகளாகவும், துரோகிகளாகவும் இருக்கின்ற மந்திரவாதிகள், சூனியக்காரர்கள், மை வேலைக்காரர்கள், பேய்க் கலையினர்கள், நோய்க் கலையினர்கள், தேய் கலையினர்கள், .... முதலியோர்களெல்லாம் செயல்படக் கூடிய செயலகமாக, ..................., [*இந்த ஒரு சொல் நகலில் தெளிவாகத் தெரியவில்லை*] உலைக்களமாக, பாசறையாக, இருப்பிடமாக ... இருக்கின்ற பதினெட்டு வகைக் காடுகளில் மேலானதும், முதன்மையானதுமான சுடுகாட்டை அருளாட்சிக்குரிய '<u>அருட்கோட்டமாக்கி</u>' அவர்களையெல்லாம் செயல்படாமல் செய்வதுதான். மந்திரவாதிகளின் தொல்லைகளிலிருந்து மக்களைக் காக்க வேண்டுமானால் நாம் நம் சுடுகாடுகளை முக்கியமாகக் கொண்டு எல்லாப் பூசைகளையும் மேற்கொண்டிடல் வேண்டும்.

எனவே தமிழகமெங்கும் உள்ள சுடுகாடுகளில் சூலம், வேல், அரிவாள், சுக்குமாந்தடி ... முதலியவற்றில் ஏதாவது ஒன்று அல்லது முடிந்தால் அனைத்தும் ஊன்றி; '<u>குருநாளான வியாழக்கிழமை</u>'யில் மட்டுமாவது திருவிளக்கு [முடிந்தால் ஏழு நாட்களிலும்] ஏற்றி வழிபடும் முறையினை உண்டாக்க வேண்டும். இதற்காக உடனடியாக சுடுகாட்டிற்குள் ஏதாவது ஒரு மரத்தடியில் அல்லது வசதியான இடத்தில் சுடுகாட்டு எல்லைக்குள் சில கற்களை வைத்து சிமெண்டினால் அல்லது களிமண்ணிலாவது திருவிளக்கு மாடத்தை அமைக்க வேண்டும். சில சுடுகாடுகளில் நிலையாக சூலம், வேல், ... முதலியவைகளை ஊன்றுவதற்கு பொதுமக்கள் புரியாமல் தடை விதிக்கலாம். அப்படிப்பட்ட சுடுகாடுகளில் திரிசூலத்தைக் கையில் எடுத்துச் சென்று குறிப்பிட்ட இடத்தில் சூலத்தை ஊன்றி சுடுகாட்டுக்குரிய அறிவிப்புகளையும், பூசைகளையும் செய்து விட்டு திரும்பவும் கையோடு திரிசூலத்தை எடுத்து வந்து விடவும். ஏனென்றால், சில சமயங்களில் நாம் வளைந்து கொடுத்தும், நெளிந்து கொடுத்தும்தான் செல்ல வேண்டியிருக்கிறது.

**காலப்போக்கில் ஒவ்வொரு சுடுகாட்டிலும் திரிசூலம் நிலையாக ஊன்றப்படும்; திருவிளக்கு மாடம் அமைக்கப்படும்; சுடுகாடுகள் எல்லாம் கோயிலாக மாறும். அந்நாள்தான் அருளாட்சியின் பொற்காலம். அப்பொற்காலத்தை உருவாக்குபவர்களே நாம்.** எனவே, நாம் பொறுப்பாகவும், பொறுமையாகவும், நிதானமாகவும் செயல்படல் வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

(5) இன்றைய குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில்தான் ஆத்தாள் தேவி பழையனூர் நீலிக்கு '<u>தேவி</u>' நிலை தந்து வழிபடப்படும் முக்கியத் தேவியாக அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆத்தாள்

தேவி பழையனூர் நீலியும் அருளாட்சிக்கு உதவுவதாக வாக்குறுதி தந்துள்ளாள். எனவே, ஒவ்வொருவரும்;

"ஆத்தாள் தேவி பழையனூர் நீலியே! பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்தில்தான் உன்னைத் தேவியாக அறிவித்து நாடெங்கும் பூசைகளை மேற்கொண்டுள்ளோம். உனக்கு, '<u>அருட்கோட்டம்</u>' அமைத்து வழிபடவும், அழைத்துப் பூசிக்கவும் எல்லாச் சித்தரடியான்களுக்கும், சித்தரடியாள்களுக்கும், சித்தரடியார்களுக்கும் கருக்களாணை, குருக்களாணை, தருக்களாணை, திருக்களாணை, தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஆணை, உலக அருளாளர்கள் ஆணைகளைக் குருவாணையாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே தாயே, ஆத்தாள் தேவி பழையனூர் நீலியே! எங்களுக்கு எல்லாவகையான பாதுகாப்புக்களையும் தந்து பத்தி நிலைகள், சத்தி நிலைகள், சித்தி நிலைகள், முத்தி நிலைகளைத் தந்தருளுக. வேண்டிக் கொள்கிறோம் -"

என்று வேண்டிப் பூசைகளைச் செய்யும்படி அறிவிக்கப்படுகிறது.

ஆத்தாள் தேவி பழையனூர் நீலிக்கு அருட்கோட்டம் அமைக்கும் வரைவுபடம் குருகுலத்தில் உள்ளது. வசதி வாய்ப்புடையவர்கள் தெரிவித்தால் உடனே உரிய வரைவு படத்தையும், விளக்கத்தையும் அனுப்பி வைக்கின்றோம்! நாடெங்கிலும் ஆத்தாள் தேவி பழையனூர் நீலிக்கு அருட்கோட்டம் அமைக்க ஒவ்வொருவரும் பெரும் முயற்சி எடுக்கக் கேட்டுக் கொள்கின்றோம்.

(6) நமது குருதேவர் சுற்றுப்பயணங்களில் உள்ள போது; குருதேவருடன் இருப்பவர்கள், குருதேவரை வரவேற்கும் அடியான்கள், அடியார்கள், அடியாள்கள், ஆதரவாளர்கள், ... முதலியோர்கள் கருப்பு, சிவப்பு வண்ண ஆடையில்தான் வந்து கலந்து கொள்ள வேண்டும். தமிழின அருளுலகத் தலைவர்கள், புலவர்கள், அருட்

கலைஞர்கள், ... நெடுங்காலமாக மக்களைச் சந்திக்காததால்தான் இருள் மிகுந்து சிதைவும், சீரழிவும், சிறுமையும், ஒற்றுமையின்மையும் தமிழினத்துள் வளர்ந்து விட்டன. எனவே, தமிழின விழிச்சி, எழுச்சி, செழிச்சி, மலர்ச்சி, ... முயற்சியாக நமது பணிகள் அமைய வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(7) பல இடங்களிலிருந்தும் நமது அடியான்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். நமது நிலைகளை, உணர்வுகளை, செயல்முறைகளை, ... அவ்வப்போது வாரம் ஒருமுறையாவது குருதேவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் குருவுக்கும், மாணுக்கனுக்கும் சங்கிலி இணைப்புப் போல் நீடித்த இணைப்பும், பிணைப்பும் இருக்கும். அத்துடன் ஒவ்வொரு தடவையும் குருவுக்கு அஞ்சல் அனுப்பும் போது கட்டாயமாக 5 பைசா, 10 பைசா தபால்தலைகள் 1¼ ரூபாய் முதல் 3.00 ரூபாய்க்குள் முடிந்தால் ரூ.3.00க்கு மேல் அஞ்சல் தலைகள் அனுப்பிடல் வேண்டும். நாம் நமக்குத் தேவையான பொருளாதார வளர்ச்சியினைப் பெறவில்லை. அன்ருடம் நூற்றுக்கணக்கான அஞ்சல்கள் தலைமை அலுவலகத்திலிருந்து அனுப்பப்படுவதால் எல்லோரும் உணர்ந்து அஞ்சல் தலைகளை அனுப்ப வேண்டும். இவ்வாறு வாரம் தவருமல் ஒவ்வொருவரின் அஞ்சலும் பூசைக்கு வந்த மலராக எண்ணிக் குருதேவர் பூசையில் வாழ்த்துவார்கள் என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

(8) அந்தந்த வட்டாரத்திலுள்ள அ.வி.தி. செயல் ஒழுங்குக் கண்காணிப்பாளர்கள்; அந்தந்த வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு அருட்கணிப்புக் கணிக்க வேண்டியிருந்தால் வீட்டு மண், சாதக நகல், கைரேகைப் பதிவு, குலதெய்வ விவரம், குடும்ப விவரம் ... என்னென்ன கேள்விகளுக்குப் பதில் வேண்டும்? என்னென்ன பூசைகள் இதுவரை செய்திருக்கிறீர்கள்? மாற்றம் எப்படி உள்ளது? ... என்பனவற்றையெல்லாம் விவரமாக எழுதி ரூ.21.00 (குறைந்தது)

வைத்து பதிவுத் தபால் மூலம் தலைமைப் பணியாளர், சென்னை முகவரிக்கு அனுப்பிடல் வேண்டும். உரிய பதில்கள் விரைவில் வரும். உரிய பரிகார முறைகளும் அறிவிக்கப்படும்.

(9) பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார் காலத்தில் மண்ணுலகும் விண்ணுலகாகும் என்பது குருபாரம்பரிய வாசகமாகும். அதற்கேற்றபடி இன்றைய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்கள் காலத்தில் ஆங்காங்கே சில முக்கியத் திரு அவதாரங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. தற்போது சூரிய குலத்தைச் சார்ந்த தாத்தா காகபுசுண்டர் அவர்கள் மதுரை மாவட்டம், திண்டுக்கல் நகர், பேகம்பூர் அஞ்சல், குடைப்பாரைப் பட்டியில், மேற்கு சாலைக் கருப்பணசாமி கோயில் தெருவில் உள்ள திருமதி இராமாயி அம்மாள் குடியிருப்பில் வாழுகின்ற, அருள்மிகு தருமத்துப்பட்டி தில்லையம்மன் சன்னிதானம், கும்மம்பட்டி கருப்பணசாமி ஆதீனம், காந்திகிராமத்து சங்கிலிக் கருப்பர் பண்டாரம், தேவேந்திர ஆச்சாரியார், நான்வேதக் கணபாடிகள், சமயபுரம் மாரியம்மன் அருளாடு நாயகம் சித்தரடியான் இரா.வெள்ளைச்சாமி என்ற தந்தைக்கும், சித்தர் மகள் திருமதி சாந்தி என்ற தாய்க்கும் மூன்றுவது ஆண் குழந்தையாக இரத்தாட்சி ஆண்டு ஆவணி மாதம் 28ஆம் தேதி (13-9-1984) வியாழக் கிழமை மாலை 3:30க்கு திரு அவதாரம் செய்துள்ளார்கள் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இக்குழந்தையை நமது குருதேவர் அவர்களே நேரில் கண்டு வணங்கி காணிக்கை செலுத்தி "காகபுசுண்டர்" என்ற பெயரையும் சூட்டி மகிழ்ந்தார். அத்துடன் இச்செய்தியை அனைவருக்கும் அறிவிப்பதன் மூலமாக எல்லாச் சித்தரடியான்களும், சித்தரடியாள்களும், சித்தரடியார்களும், சித்தர் நெறி ஆதரவாளர்களும் நேரில் சென்று திரு அவதாரம் செய்துள்ள தாத்தா காகபுசுண்டர் அவர்களை

வணங்கித் தங்களாலியன்ற காணிக்கையையும் செலுத்தி அருள் பெற வேண்டும் என்று அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது. ஏனென்றால், திரு அவதாரம் செய்தவர்களை நாம்தான் தேடிச் சென்று நேரில் வணங்க வேண்டும் என்ற மரபுக்கிணங்க இவ்வறிவிப்பை வழங்குகிறோம். நேரில் தற்பொழுது பார்க்க இயலாவிட்டாலும் அஞ்சல் வழியாகவாவது உரிய காணிக்கைகளை அனுப்பி அருளூறு பூசனைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

(10) மதத்தை ஒரு விஞ்ஞானமாக்கி யார் வேண்டுமானாலும் அநுபவப் பூர்வமாக மதத்தின் பேருண்மைகளை அறியலாம், ஆராயலாம், உணரலாம், பயன்படுத்தலாம், மத விஞ்ஞானியாகலாம் - என்ற பகுத்தறிவுப் போக்கைச் சமயத்துக்கு வழங்கிச் சமுதாய மறுமலர்ச்சிப் பணியைத் துவக்கியுள்ளோம் நாம். நமக்குள் தனிமனித ஆதிக்கம், சர்வாதிகாரம் வழிநடத்தல் கூடாது, கூடவே கூடாது. நம்மவர்கள் சித்தர் நெறியை விளக்கும் அடிப்படைக் கருத்துக்களை வழங்கும் குருதேவர் அவர்களின் பல நூறாயிரக்கணக்கான அஞ்சல்களின் தொகுப்பு, கட்டுரைகள், அச்சிட்ட அறிக்கைகள், நூல்கள், ... முதலியவற்றை அன்றாடம் 2½ மணி நேரம் (ஒரு சாமம் = யாமம்) படித்தேயாக வேண்டும். அதுதான் கருத்து விளக்கம் தரும். அதேபோல் பகலில் 11 to 1½ அல்லது இரவில் 11 to 1½ ஏதாவது ஒரு நேரம்; முடிந்தால் இரண்டு நேரங்களிலும் கண்டிப்பாகக் கலசபூசை செய்தேயாக வேண்டும். அதுதான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளை உணரவும்; திருவருள், தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருள், குருவருள், உலக அருளாளர் துணை (ஆதரவு) முதலியவைகளைப் பெற்றுத் தரும். இதன் மூலம் நம்மவர்கள் அருட்பணிக்குரிய ஆற்றலைப் பெற்றிடுவார்கள் - என்ற அறிவிப்பும் அறிவிக்கப்படுகிறது.

(11) ஞானத் தந்தை, இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குருதேவர் அவர்கள் சுற்றுப்பயணங்களில் உள்ள போது பொதுமக்கள் குருவிடம்

அருள் பெறவும், அருட்கணிப்பைப் பெறவும் "அருட்கணிப்புச் சான்றிதழ்" அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளதை முன்கூட்டியே பதிவு செய்து வரிசை எண்படி வழங்கிட வேண்டும். குருதேவர் அவர்களைச் சந்திக்க எல்லாரும் மொத்தமாக இடித்துக் கொண்டு போய் ஒன்றும் செய்ய முடியாத நிலையைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். ஒரு குடும்பத்தாருக்குக் கணிக்கும் போதும், அருள் வழங்கும் போதும் மற்றவர்கள், மற்ற குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அருகில் இருக்கவே கூடாது. அதனால் அநுபவப் பூர்வமாக சில நடைமுறைச் சிக்கல்கள் எழுந்துள்ளன. அவைகளைத் தடுக்க அந்தந்த வட்டாரத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், செயலாளர்கள்தான் பொறுப்பாகவும், பொறுமையாகவும் கவனித்துக் கொள்ள வேண்டும். நமக்கு வேண்டியவர்கள் என்பதற்காக வரிசை எண் மாறி முன்கூட்டியே குருவைச் சந்திக்க அநுமதிப்பதும், நமக்கு அறிமுகம் இல்லாத புதியவர்கள் என்பதற்காக அவர்களைக் கடைசியில் சந்திக்க ஏற்பாடுகளைச் செய்வது என்ற முறைகேடுகளைத் தவிர்க்க ஒவ்வொருவரும் முயல வேண்டும்.

(12) அமாவாசை முதல் முழுநிலவு வரை வளர்பிறை 15 நாட்களிலும், முழுநிலவு முதல் அமாவாசை வரை தேய்பிறை 15 நாட்களிலும்; ஒவ்வொரு அ.வி.தி. மையத்திலும் பருவபூசையைச் செய்ய வேண்டும். பருவபூசை என்பது சந்திர குலத்துக்குரியது; கருவூருரை வழிபட்டு இரவில் செய்யப்படுவது; தனிமனித அருட்சத்திக்கும் சித்திக்கும் உரியது; குலதெய்வங்கள், விருப்ப தெய்வங்களின் அருளைப் பெறச் செய்வது; ஒன்பது பேய்க் கலைகள், ஒன்பது நோய்க் கலைகள், ஒன்பது தேய் கலைகள், ஒன்பது கடவுட் கலைகள், ஒன்பது தெய்வீகக் கலைகள் ... முதலிய அனைத்துக் கலைநிலைகளிலும் உயர்த்த வல்லது.

எனவே, ஒவ்வொரு அ.வி.தி. மையப் பொறுப்பாளர்கள், தலைவர், செயலாளர், ஆதரவாளர்கள் ஆகியோர்கள் ஒன்று கூடி தமது

அ.வி.தி. மையத்தில் எந்த நாளில் பருவபூசை செய்வது என்று நிர்ணயம் செய்து அம்முடிவைக் குருதேவர் அவர்களிடம் அறிவித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாளும் சூரியனிடமிருந்து சந்திரன் $12^o$ வீதம் விலகிச் செல்கிறது. இவ்வாறு ஒரு மாதத்தில் $30x12^o=360^o$ சந்திரன் செல்வதை வைத்துத்தான் பஞ்சாங்கத்தில் திதி கணக்கிடுகிருர்கள். சூரியனும் சந்திரனும் ஒரே இராசியில் உள்ள போது அமாவாசை ஏற்படுகிறது. அதாவது சூரியனே விட்டுச் சந்திரன் பிரிந்து மீண்டும் சேர ஏறத்தாழ 30 நாட்கள் ஆகின்றன. அமாவாசையை 30வது நாளாகக் கொண்டு துவங்கி; அமாவாசைக்கு மறுநாளே அதாவது வளர்பிறை 1ஆம் நாளே துவக்கமாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் வளர்பிறையில் 15 நாட்களும்; தேய்பிறையில் 15 நாட்களும் பருவபூசைகளேச் செய்ய வேண்டும்.

நாம் கணக்கிடும் போது 1 முதல் 30வது நாள் என்று கணக்கிட்டுக் கொள்ள வேண்டும். 1வது நாள் அமாவாசைக்கு மறு நாள் என்று துவங்க வேண்டும். 30வது நாள் முழு அமாவாசை. 15வது நாள் முழுநிலவு. 1 to 15 நாட்கள் வரை வளர்பிறை நாட்கள்; 16 to 30 நாட்கள் தேய்பிறை நாட்கள். இந்நாட்களில் எந்த நாளில் பருவபூசை என்பதைத் தேர்ந்தெடுத்து குருதேவர் அவர்களுக்கு அனுப்பினுல் அதை ஆய்வு செய்து இன்ன நாளில் பருவபூசை செய்ய வேண்டும் என்று குருதேவர் அவர்கள் உரிய நாளே பூசை செய்யத் தெரிவிப்பார்கள். மாதத்தில் 30 நாட்களிலும் இரவில் பருவபூசை நடைபெறும். வீரமாகாளி சன்னிதானத்தில் 14வது நாளில் அதாவது வளர்பிறை 14வது நாள் முழுநிலவுக்கு முதல் நாள் பருவபூசை கொண்டாடப்படுகிறது. ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பருவபூசை நடைபெறக் கூடாது. தவிர்க்க

முடியாத காரணங்களாக இருந்தால் குருவாணை பெற்றிருக்க வேண்டும். அப்போது மட்டும் விதிவிலக்குண்டு.

(13) குருதேவரிடமிருந்து சித்தரடியான்கள், சித்தரடியார்கள், சித்தரடியாள்கள் நேரடியாக அருள்நிலைத் தகுதிகள், அருட்பட்டங்கள், அருட்பட்டமளிப்புச் சாசனங்கள் பெற்றால் உடனடியாக அ.வி.தி. தலைமைச் செயலாளர் வீரமாகாளி சன்னிதானம் பரமாச்சாரியார் அவர்களுக்கு அவ்வஞ்சல் நகலை அனுப்பி, அதற்குரிய திருமந்திற ஓலைநாயகத்தின் ஒப்புதல் அருளாட்சித் தாக்கீது பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

(14) 7-4-1984ஆம் தேதி முதல் ஓக, யோக, போக, மோக, தவப் பயிற்சிகள், '<u>இருக்கை முறைகள்</u>' (இச்சொல் 'ஆசனம்' என்று ஆரியர்களால் குறிக்கப்படும் மரபு) அனைத்துக் கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள், தாத்தாக்கள் ஆத்தாக்கள், உலக அருளாளர்கள் விருப்பார்ந்த ஒப்புதலோடு குருதேவர், தலைவர், ஞானத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் என்ற நிலைகளை அடைந்துள்ள,

இந்து மதத் தந்தை,
குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூறார்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி

அவர்களால் துவக்கப்பட்டு விட்டன. இதுவே அனைத்து அடியான்கள், அடியார்கள், அடியாள்கள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், மத விருப்பாளர்கள் அனைவருக்கும் அறிவிப்பு. அவரவர் வசதி வாய்ப்புப்படி அன்றாடம் காலை, மாலை 108 முறைகள் காயந்திரி மந்தரம் ஓத வேண்டும்.

(15) சித்தர் நெறிப்படி **'விதவை என்பது கிடையாது'; 'மங்கை மாதம் தோறும் மலரும் மலர்'; 'பெண்ணே அருளுலக விழி, வழி,**

**வழித்துணை'; 'அணங்கே அண்டபேரண்ட சத்திகளை மண்ணுலகுக்கு வழங்கும் மழை'; 'பெண்ணே அனைத்துச் சித்திகளையும் வழங்கும் நடமாடும் பராசத்தி'; 'பெண்ணை வழிபடலே விண்ணுலக முத்திகளை நல்கும்'; 'பெண்ணை நத்தியே அருட்தத்துவ விளக்கம் பெறலாம்'; 'பெண்ணே பேரின்ப வழிகாட்டி'; ...** என்ற சித்தர் நெறி கருவாசக, குருவாசக, திருவாசகக் கருத்துக்களைச் செயல்விளக்கமாக்கிடச் சித்தர்கள் '<u>தாந்தரீகப் பூசை</u>' என்ற உயர்ந்த தத்துவப் பூசையை வழங்கியுள்ளார்கள். பதினெண்சித்தர்கள் காற்றோடு காற்றாகக் கலந்திருக்கும் தெய்வீக அணுக்களை (The Divine Atoms) மனித உடலுக்குள் செலுத்தி குறிப்பிட்ட மனிதருக்கு எல்லா நன்மைகளும், '<u>இயற்கை கடந்த மனிதர்</u>' (The Super Man) என்ற நிலையை உருவாக்கும் முறையாக வகுத்ததுதான் இந்தத் தாந்தரீகப் பூசை.

அச்சம், கூச்சம், இச்சை, ஆச்சரியம், மாச்சரியம், வெறுப்பு, ... முதலிய உணர்வுகளைக் கடந்து குருவிடமும்; குருவின் வாரிசுகளிடமும், குருவின் பதிலிகளிடமும் இப்பூசைகளைச் செய்து கொள்ளலாம். பிறப்பு, இறப்பு வெல்லும் முயற்சியின் முதிர்ச்சியே இப்பூசை. முற்பிறப்பு, மறுபிறப்புக்களை உணரும் முயற்சியின் முதிர்ச்சியே இப்பூசை. உருவ, அருவ, அருவுருவங்களைத் தெரிந்து தொடர்பு கொள்ளும் முயற்சியின் முதிர்ச்சியே இது.

உடலும் உள்ளமும் பூக்கும் புதுமலரின் மணமும், இனிமையும் பெறும் முயற்சியின் முதிர்ச்சியே இது. பதினெண்சித்தர்கள் பெண்களைச் சத்தியாகவே ஏற்று வழிபட்டனர் என்பதையும்; கல், மண், மரம், உலோகம் ... முதலிய பொம்மைகளைக் கடவுளாக்குவது போல்; உயிரும், உணர்வும், அறிவும் உள்ள பெண்களைக் கடவுளாக்கினர் என்பதையும் விளக்குவதே தாந்தரீகப் பூசை.

அளவுக்கு அதிகமான பொறுமை, பொறுப்பு, துணிவு, கனிவு, கூர்மை, நேர்மை, சீர்மை, குருவின் நம்பிக்கையும் வாழ்த்துதலும் பெற்ற பெருநிலை, ... முதலியவைகளைப் பெற்றவர்களே தாந்தரீகப் பூசை செய்ய முடியும். மண்ணிலும் விண்ணிலும் நிறைந்துள்ள தெய்வீகச் சத்திகளை அநுபவப் பூர்வமாகப் பெண்ணின் உடலில் தேக்கிப் பிறகு தேவைக்கேற்ப எடுத்து வழங்கும் அருட்கொடைத் திட்டமே '<u>தாந்தரீகப் பூசை</u>'.

இதனைப் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியால்தான் குருவின் விந்துவழி வாரிசுகளல்லாத சாதாரணப் பொதுமக்களும் பெறுவார்கள். அக்காலத்திலேயே மனிதர்களில் பலர் கடவுள்களாக ஆக்கப்படுவார்கள். இம்மாபெரும் வாய்ப்பை ஊழ்வினை, விதி, ஓகம், ... உள்ளவர்கள்தான் அநுபவிக்க முடியும். உலகியல் கடந்து குருவிடம் தங்களை முழுமையாக ஒப்படைக்கும் '<u>சரணாகதி நிலை</u>'யினரே தாந்தரீகப் பூசைகளில் வெற்றி பெறுவர்.

மனிதப் பிறவியின் பயன், உண்மை நிலை, ... முதலிய அனைத்தையும் உணரச் செய்வதே தாந்தரீகப் பூசை. பதினெண்சித்தர்களின் தாந்தரீகப் பூசை ஏட்டில் எழுதப் படாதது. ஆரிய மாயையாகப் பல தாந்தரீகப் பூசைகள் உள்ளன. எனவே, பாரம்பரியச் சித்தர்களிடம் தாந்தரீகப் பூசைகளை அறிக! குருவால் இட்டும், தொட்டும், சுட்டியும் அருள் வழங்கப்படுபவரே முழுமையான அருள்நிலைகளைச் சித்தி செய்து கொள்ள முடியும்.

- *குருபாரம்பரிய வாசகம், குருவாசகம், குருவாக்கு வரிகள்.*

ஞாலகுரு குருமகா சன்னிதானம் சித்தர் கருவூரர் அவர்கள் 1-3-1983இல் வெளியிட்ட கருத்தைத்தான் அனைவருக்கும் அறிவிக்கப் படுகிறது.

எனவே, நம்மவர்கள் இந்தப் புனித தாந்தரீகப் பூசையின் முழு விவரம், முறை தெரியாமல் இது தவருனது, முறைகேடானது, அச்சமானது, முரணுனது, சமுதாயச் சட்டதிட்டங்களுக்கு அப்பாற்பட்டது, மாறுபட்டது, வேறுபட்டது, தேவையற்றது, ஒத்து வராதது, இழிந்தது, இச்சைக்குரியது, மாச்சரியத்துக்குரியது, கையாள முடியாதது, ... என்றெல்லாம் சுட்டிக்காட்டிப் பேசுவதும், எதிர்ப்பதும், வேதனைப்படுவதும், கருத்து மாறுபாடு கொள்வதும், குழம்புவதும், கலங்குவதும், மயங்குவதும், தயங்குவதும், ... தேவையில்லை.

எத்தனையோ இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் இறைவனை வழிபட்டாலும்; வழிபாட்டின் உண்மைத் தத்துவங்களைப் புரிந்து தன்னை பற்றி அறியும் ஆற்றலும், முழுமையான அருள் பெற்று விட்டோம் என்ற மன நிறைவும் எவருக்கும் ஏற்பட்டதே இல்லை. ஏதோ மக்கள் எதையோ நினைத்துக் கொண்டு எங்கோ சென்று கொண்டிருக்கிருர்கள். பீடாதிபதிகள் தோன்ருத சமயத்தில் வேண்டுமாஞல் முன் கூறியபடி மக்கள் அருளுலகில் திக்குத் திசை தெரியாமல் திக்குமுக்காடலாம். ஆனல், பீடாதிபதி தோன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்ற, செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இக் கலிகாலத்தில் யாரும் திணற வேண்டாம், திசைதப்பிப் போய்விட வேண்டாம் என்பதற்காக ஏட்டில் எழுதப்படாத மறை என்ற பூசைமுறைகளைக் குருவால் மாணுக்கர்களுக்கு இட்டும், தொட்டும், சுட்டியும் விளக்கி அருள் வழங்கப்படுகிறது. இதன் உண்மைத் தத்துவம் என்னவென்றே புரியாமல் திகைத்து; இது ஆபாசமானது, அநாகரீகமானது, காட்டுமிராண்டித்தனமானது, கண்டிக்கத் தக்கது, அருவெறுக்கத் தக்கது ... என்று யாரும் குறை கூறிடல் வேண்டாம்.

"தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது";

"குருவருளும் திருவருளும் தெய்வீக வாழ்வின் இரு கண்கள்";

"குருவருளின்றி திருவருள் சித்திக்காது, தித்திக்காது";

"இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்க வல்ல முத்திறத்தாரே ஞானகுரு";

"ஊசிமுனையில் நின்று கோடானுகோடி ஆண்டுகள் தவமிருந்தாலும் உரிய குருவருளின்றி திருவருள் சித்திக்காது"

என்பதனை ஒவ்வொருவரும் உணர வேண்டும். இந்த இரகசியங்களை எல்லாம் படிப்படியாக அநுபவத்தின் மூலம்தான் உணர வேண்டும். மனப் பக்குவம் உள்ளவர்களுக்கு இப்பயிற்சிமுறை உளப் பக்குவத்துக்கேற்றபடி உபதேசிக்கப்படும். எனவே, நம்மவர்கள் இந்த முறைகளைப் பற்றி அரைகுறையாகக் கேள்விப்பட்டு, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற அவசர உணர்வோடு செயல்பட்டு விடக் கூடாது.

இவை பற்றிய விளக்கம் வேண்டுபவர்கள் குருகுலத்துக்கோ, குருதேவர் அவர்களிடமோ நேரில் வந்தால் விளக்கமும், பயிற்சியும் அளிக்கப்படும். உங்களுடைய இயலாமைகள், உலகியல் சிக்கல்களை அனுசரித்து உரியது வழங்கப்படும். இப்பூசை முறை அனைவருக்கும் கட்டாயம் இல்லை; வற்புறுத்தல் இல்லை; 'காலம் மாறும் கனியவும் செய்யும்' - என்ற முதுமொழிக்கேற்ப கனிந்த மனமும் உளமும் வரும்போது சித்தியாகும். அதுவரை உரிய மற்ற பூசைகளைச் செய்து கொண்டு வந்தாலே போதும். அருளுலகில் நமது முயற்சி, உழைப்பு, ஆர்வம், உண்மை, நம்பிக்கை, குருபத்தி, நன்னெஞ்சம், நேர்மை, விட்டுக் கொடுத்தல், சகிப்புத்தன்மை, ... முதலியவைகள் மூலம் சிறந்த அருளாளராக மாறலாம், உயரலாம், உய்வு பெறலாம். எனவே, ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி எந்தப் பூசை பற்றியும் பயப்படத் தேவையில்லை.

பீடாதிபதிகள் தோன்றுகின்ற காலத்தில்தான் மறைகள் வெளிப்படும்; பூசாமுறைகள், பூசாவிதிகள், ... முதலியவைகளை நாம் அறிந்து

கொள்ள வாய்ப்புண்டு. பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றுகின்ற காலத்தில்தான் குரு பாரம்பரியம், அரச பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் என்ற மூன்றும் பீடாதிபதிகளால் வெளிக் கொணரப்பட்டு; சாதாரண மானுடர்களுக்கு உணர்த்தப்படுகிறது. இவைகளைச் சாதாரண மானுடர்களுக்கு உணர்த்த வேண்டுமானால், அறிவிக்க வேண்டுமானால், மானுடர்கள் அந்த இன்பத்தை அநுபவிக்க வேண்டுமானால் அவ்வக் காலத்தில் தோன்றியுள்ள பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இட்டும், தொட்டும், சுட்டியும்தான் அறிவிக்க வேண்டும், உணர்த்த வேண்டும். இதை உணர்த்த, அறிவிக்க, உலகுக்கு வழங்க பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்குத்தான் தரம், திரம், திறம், வீரம், உரம், அறம், மறம், தீரம், விவேகம், ... முதலியன உண்டு. ஒருபோதும் பீடாதிபதிகள் இவைகளை வெளியாக்குவதில் ஏழைகளாகவோ, கோழைகளாகவோ, மோழைகளாகவோ, கூழைகளாகவோ, பாழைகளாகவோ, நூழைகளாகவோ, வீழைகளாகவோ இருந்து விடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! - என்ற கருவாணை, குருவாணை, தருவாணை, திருவாணை, அருளாணை, மருளாணை, தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஆணை, உலக அருளாளர்கள் ஆணை, பீடக் குருவாணை ... முதலியன விதிக்கப்பட்டிருக்கிறது.

இந்த உண்மைகளை உலகுக்கு உரைக்கும் போது உலகியலில் உள்ள பலரும் தயங்க, மயங்க, கலங்க, குழம்ப, மறுக்க, வெறுக்க, நகையாட, பகையாட, ... நேரிட்டாலும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எந்தவிதச் சிறு சலனமும், மாற்றமும் இன்றி தமது வழியில் செயல்பட்டே தீருவார்கள். இந்த உலகுக்கு பீடாதிபதியாகத் தோன்றியவர்கள் என்ன சொல்லி விட்டுச் சென்றுள்ளார்கள், என்ன சாதித்து விட்டுச் சென்றுள்ளார்கள் என்ற குற்றச் சாட்டுக்கு ஒரு போதும் இடம் கொடுக்காமல் அனைத்து மனித நெஞ்சங்களையும் ஒட்டு மொத்தமாக எண்ணித்தான் மறை வித்துக்கள், முறை வித்துக்கள்,

நெறி வித்துக்கள், வேத வித்துக்கள்... என்று ஏராளமான அருள் வித்துக்களை வாரிவாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, சித்தர் வருகின்ற, வந்துவிட்ட இத்தருணத்தில் சித்தரை நம்பி, விரும்பி, ஏற்றுப் போற்றி, வணங்கி அனைத்துப் பத்தி நிலைகளையும், சத்தி நிலைகளையும், சித்தி நிலைகளையும், முத்தி நிலைகளையும் பெற வேண்டும் என்று அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது.

சித்தர் நெறியின் செயல்திட்டங்களில் விருப்பமில்லாதவர்கள் அன்பு கூர்ந்து தங்கள் தங்களின் பக்குவ நிலைகளுக்கேற்ப சித்தர் நெறியின் ஆதரவாளர்களாகவோ, விருப்பாளர்களாகவோ, ஏந்தாளர்களாகவோ, தோழர்களாகவோ, நண்பர்களாகவோ ... எட்ட இருந்தே ஒதுங்கிய நிலையில் நின்று செயல்படட்டும். ஏனென்றால் ஏறத்தாழ 4000 அல்லது 5000 ஆண்டு காலமாக அந்நியர்களின் சூழ்ச்சிகளாலும், சதிகளாலும், ஏமாற்றுக்களாலும், பித்தலாட்டங்களாலும், திரிபுகளாலும், கற்பனைகளாலும், கதைகளாலும் தமிழ்மொழி, இனம், நாடு என்ற மூன்றும்; மூன்று பெரும் யுகங்களில் பெற்றிருந்த ஒற்றுமை, கட்டுக்கோப்பு, உரிமை, பெருமை, வளமை, வலிமை, வாழ்வியல் செழுமை, ஆட்சி மாட்சி ... முதலிய அனைத்தும் சிதைக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டு நலிந்தும், மெலிந்தும் வளர்ச்சியோ, மலர்ச்சியோ, உயர்ச்சியோ பெற முடியாமலிருக்கின்றன. இவற்றிற்காக இருபெரும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் (பத்து, பதினொன்று) எடுத்த மாபெரும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியையே தழுவி விட்டன.

இவற்றையெல்லாம் உணர்ந்துதான் இராசிவட்ட நிறைவுடையாராக, காக்கையருக்கும், கருவூராருக்கும் உரிமை பெற்ற முதல்நிலை வாரிசு பதினெண்சித்தர் பீடத்தில் பன்னிரண்டாவது அருட்பேரரசராக அமர்ந்தும்; ஏட்டுச் சுரைக்காயாக இருந்த 48க்கும் மேற்பட்ட அருள்நிலைகளை எல்லாம் செயலுக்கு உரியவைகளாக்கி இம்முயற்சியின் உயர்ச்சி மிகு முகடாக அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்

என்ற இருபெரும் நிலைகளையும் எய்தி இன்றைய அருளுலகத்தார் அனைவராலும் இந்துமதத் தந்தையாகவும், ஞானாச்சாரியாராகவும், குருதேவராகவும், தலைவராகவும் ஏற்கப்பட்ட நிலையிலேயே ஞாலகுரு சித்தர் கருவூரார் இட்டும், தொட்டும், சுட்டியும் பரிபக்குவ நிலைகளுக்கு ஏற்ப அருளை அநுபவப் பொருளாக வழங்கும் பணியினைத் தமிழகத்தில் முப்பத்தேழு அ.வி.தி. நிலையங்களின் மூலம் இன்று வரை நிதானமாகத் துவக்கிச் செயல்படுகிறார்.

இதனைப் புரிந்து தமிழினத்தின் விடிவுக்குரிய முயற்சிகள் தடைப்படாமல் நிகழ்ந்தேறிட; யாரும் அவரவரின் விருப்பையோ, வெறுப்பையோ, கசப்பையோ துரோகச் செயல்களாகவோ, விரோதச் செயல்களாகவோ வடிவப்படுத்த வேண்டாம். அதாவது, உலகம் தழுவி நிகழப் போகிற மத வழிப் புரட்சிக்கு தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு எனும் முக்கோணப் பீட நாற்றுப் பண்ணையில், விதைப் பண்ணையில் பயிர் வளவளர்ச்சி ஆராய்ச்சிப் பண்ணையில் ஊடுபயிரோ, களையோ, நோயோ ஏற்பட்டு விடாமல் பாதுகாக்கும் கடமை, பொறுப்பு, பொறுமை அனைவருக்கும் உண்டு! உண்டு! உண்டு! என்று அறிவிக்கப்படுகிறது.

குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் தமது கடலோடிக் காடோடி நாடோடி ... வாழ்வியலின் பயன்களை தமிழ்மொழி, இன, நாட்டு மறுமலர்ச்சிக்காக, தன்மான விழிச்சிக்காக, தன்னம்பிக்கை எழுச்சிக்காக, உரிமைச் செழுச்சிக்காகப் பயன்படுத்தி வருகின்றார். இவருக்கு உதவி செய்யவே அனைவரும் முயல வேண்டும். வீட்டுக்கோர் இளைஞரைத் தந்து உதவ வேண்டும். அவரவரால் முடிந்த அளவு முயன்று அனைத்து வகையான காணிக்கைகளையும் நல்க வேண்டும். குருவாணைகளை ஏற்றுப் போற்றிப் புரிந்து பணிந்து வீர தீரத் தியாகத்தோடு செயலாக்கிடல் வேண்டும். இயலாதவர்கள் தங்களால் முடிந்தவரை ஒதுங்கி ஒதுங்கி! விலகி விலகி! நீங்கி நீங்கி! அகன்று

அகன்று! நின்று விடலாம்! நின்று விடலாம்! நின்று விடலாம்! என்று அறிவிக்கப்படுகிறது.

(16) ஞானக்காட்சி பார்ப்பவர்கள், அருட்கணிப்புக் கணிப்பவர்கள் முடிந்த அளவு குருவின் ஒப்புதலேயும், ஆணையையும் பெற்றிட வேண்டும். அத்துடன் அன்றாடம் காலே, மாலே 108 தடவைகள் காயந்திரி மந்தரம் கூறிப் பூசை செய்பவராகவும்; இரவு, பகல் 11 to 1½இல் கலச பூசை செய்பவராகவும் இருக்க வேண்டும். அன்றாடம் காயந்திரி மந்தரமோ, கலச பூசையோ, தவ பூசையோ செய்யாதவர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அருட்கணிப்புக் கூறவோ, ஞானக்காட்சி பார்க்கவோ, அருள்வாக்குக் கூறவோ கூடாது என்று அறிவிக்கப்படுகிறது. அந்தந்த மாவட்டத் தலேமைச் செயலகத்தில் மாதம் தோறும் நடைபெறும் பருவபூசையில் தவருமல் கலந்து கொள்ள வேண்டும்.

(17) நம்மவர்களில் சிலர் அருள்வாக்கும், அருட்கணிப்பும், ஞானக்காட்சியும் பார்த்துக் கூறுபவர்களாக உள்ளார்கள். ஒரு அருட்கணிப்பாளர் ஒருவரைக் கணித்துச் சில பரிகாரமுறைகளேயும், பூசைமுறைகளேயும் கூறியிருக்கும் போது; அந்த நபருக்கு மற்ருெரு அடியான், அடியாள் ஞானக்காட்சி மூலமாகவோ, அருள்வாக்கு மூலமாகவோ, அருட்கணிப்பு மூலமாகவோ எந்தக் கணிப்பும் கணிக்கவே கூடாது. ஏனென்ருல், ஒருவர் கணிப்பதற்கும், மற்ருெருவர் கணிப்பதற்கும் ஒருசில வேறுபாடுகள் இருக்கலாம். ஒவ்வொருவர் பெற்ற சத்தியின் அளவும், பெற்ற சன்னிதானத்தின் வலிமையும், அவர் செய்த பூசைப் பயனும்தான் இதற்குக் காரணம். ஒருவர் கணித்ததை மற்ருெருவர் கணித்து வேறு விதமான கணிப்புக்களேக் கூறும்போது கேட்பவர்களின் மனநிலேயில் ஐயமும், அவநம்பிக்கையும் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் நமது அடியான்களுக்குள்ளேயே தான் கணித்ததுதான் சரியென்ற எண்ணத்தில் ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு,

மாறுபாடு கொள்ள நேரிடுகிறது. ஏறத்தாழ எல்லா அடியான்களும் கணிப்பது சரிதான். இதைச் சரிப்படுத்திக் கொள்ள அவ்வப்போது குருதேவருக்கும், குருகுலத்துக்கும் தெரியப்படுத்திச் சரி செய்து கொள்ள வேண்டும்.

(18) அருள் வழங்கும் போது பிணியாளர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் கையால் தொடவே கூடாது. மயிற்பீலியைக் கொண்டு மட்டும்தான் மந்திரிக்க வேண்டும், அருள் வழங்க வேண்டும். அத்துடன் பிணியாளர்களின் உடம்பில் பேய், பிசாசு, ஆவி இறங்கிப் பேசும் போது அல்லது ஆடும் போது அவைகளுடன் நாம் பேசும் போது அதட்டியோ, திட்டியோ பேசக் கூடாது. அல்லது தலைமுடியைப் பிடித்து ஆட்டக் கூடாது, அடிக்கக் கூடாது. நாம் பேய், பிசாசு, ஆவிகளையும் மதித்து அவைகளின் எண்ணங்களை, ஆசைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை அனைவருக்கும் அறிவிக்கப்படுகிறது.

அன்பே சிவம்

ஓம் திருச்சிற்றம்பலம்.

அன்பு

சித்தரடியான்,

வீரமாகாளி சன்னிதானம்,

அரியவாள், பரமாச்சாரியார்,

நெ.சேவுகன்.

23-12-1985.

**//உண்மை நகல்//**

**//மூலம்: திருமந்திர ஓலைநாயகம், பரமாச்சாரியார் திரு நெ.சேவுகன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் நகல். ஆங்காங்கே ஒரு சில சொற்கள் நகலில் தெளிவாகத் தெரியவில்லை. தெரியாத சொற்கள் .................. என்று போட்டு விடப்பட்டுள்ளன.//**

# அவசர அவசியச் செயல்விளக்கக் கண்டிப்புக் குருவாணை

1) அ.வி.தி. தலைமைச் செயலாளர் கண்டிப்பும், பொறுப்பும், பொறுமையும், துணிவும், உடனுக்குடன் செயல்படும் தன்மையும் பெறுமலிருப்பது வருந்தத் தக்கது. உடனே திருந்த வேண்டியது. **குருவாணை**.

2) அ.வி.தி. பொதுச் செயலாளர் சோ.இரவீந்திரன் நகல்கள் விரைந்து எடுப்பதோடு; திருநெல்வேலி, கோயம்புத்தூர், முசிறி வட்டாரம் மின்னல் வேகமாகச் செந்துரை சுடாலின் சரோசினியுடன் அருட்பணி செய்ய வேண்டும். **குருவாணை**.

3) சுடாலின் சரோசினியை மாநிலம் முழுவதும் அருட்கணிப்பு, அருள்வாக்குச் சொல்ல அருளாணை கிடைத்துள்ளது. நம்மவர்கள் யாராக இருந்தாலும் மேற்படி அருட்கணிப்புக் குடும்பத்தவரை அவர்கள் பங்குபெறும் பூசையில் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும். ரூ.11.25 பெற்றுக் கூறும் கணிப்பை 1+2 = 3 நகல் எழுதித் தலைமைப்பீடம், தலைமைச் செயலாளர், தங்களுடைய வட்டார நிலையம் என்று அனுப்பிக் காத்தல் வேண்டும். **குருவாணை**.

குறிப்பு:-

I. இவர்களிடம் பொருமை ஏற்படத் தேவையில்லை. இவர்கள் பங்கு பெறும் பூசைகளில் இவர்கள் மட்டுமே அருட்கணிப்புக்

கூற வேண்டும். ஏனெனில், நாடெங்கும் சுற்றி வருபவர்கள் இவர்களே.

II. இவர்களின் உணவு, போக்குவரத்து ஓரிடத்திலிருந்து அடுத்த இடத்துக்கு அந்தந்த வட்டாரத்தாரால்தான் ஏற்கப்படல் வேண்டும். பயணச்சீட்டு (டிக்கட்) வாங்கி வண்டியில் ஏற்றிவிட வேண்டும். நம்மவர்கள் ஒருவரை ஒருவர் மதித்து அன்பு செலுத்திப் பழகி வளர வேண்டும். **குருவாணை**.

III. ரூ.3.00 பெற்று ஐந்து (5) மணித்துளி அருள்வாக்கும், ரூ.1.25 பெற்று வாழ்த்தும் வழங்கட்டும். (மக்கள் மந்திரவாதிகளிடம் கடன்பட்டாவது பணம் செலவழிப்பது நாட்டு நடப்பில் உள்ளது. எனவே, ரூ.1.25 பெற்றே அ.வி.தி. பணி நடக்கட்டும்.)

IV. முடிந்தால் விரைந்து வீ.மா.ச. ஒருமுறை முசிறி, சிறுமுகை சென்று வர வேண்டும். - **ஆணை**.

*[4 முதல் 15 பத்திகள் வரை உள்ளவை அனைவருக்கான கருத்தல்ல என்பதால் நீக்கப் பட்டுள்ளன.]*

16) குண்டலினி, காயகல்பம், வாரவழிபாடு, யோகமுறை, யாகம், அருள்வாக்கு, தவம், ... என்ற பெயர்களால் மனித ஆற்றலும், நேரமும் பெரிய அளவில் வீணாகின்றன. இவற்றை உடனடியாகத் தடுக்கவும், தவிர்க்கவும், மெய்யான இந்துமதக் கருத்துக்களும், செயல்களும் பொதுமேடைகளில் முழக்கப்படல் வேண்டும். அ.வி.தி. பணிகள் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும்:-

**"கடவுள் கற்பனைப் பொருளில்லை",**

**"மதம் வறட்டு நடைமுறையல்ல",**

**“பூசைகள் மறுபிறவிக்கோ மோட்சத்துக்கோ மட்டும் உரியவையல்ல”,**
**“தன்னையும் தலைவனையும் உணர்த்துவதுதான் வழிபாடு”,**
**“குருவழியாகத்தான் சித்தி முத்தி பெற வேண்டும்; புத்துயிர்ப்புப் பணிகளால் அருளூற்றுக்கள் புதுவெள்ளம் போல அருளைப் பெருக்கெடுத்தோடச் செய்தல் வேண்டும்”,**
**“தனிமனித தவங்களால் அருளுலகம் கனிமலர்ச் சோலையாக வேண்டும்”**

... எனப்படும் **கருவாக்கியங்கள்** செயலாக வேண்டும். எனவே, நாட்டிலுள்ள அருளாளர்கள், பத்தி இயக்கங்கள், திருச்சபைகள், வார வழிபாட்டு அமைப்புக்கள், மதத் தலைவர்கள், பூசாறிகள், குறிகாரர்கள், ... நம்மவர்களால் சந்திக்கப்பட்டு ஒன்று திரட்டப்பட்டேயாக வேண்டும். நமது கிளைகள் கிராமம் தோறும் விரைந்தும் விரிந்தும் தோற்றுவிக்கப்படல் வேண்டும். செயல்! செயல்! செயல்!

17) நாம் ஒரு மாபெரும் இயக்கமாக, திராவிடப் பாரம்பரியங்களைக் காத்திட, தமிழ்ப் பண்பாடுகளைக் காத்திட, நாட்டிற்குச் சமய சமுதாய அரசியல் போலி காலி கூலி, ... நிலைகளை முறியடித்தேயாக வேண்டும். **அசாம் மாநிலம் போல் புதியதோர் சத்தி, இயக்கம், ... ஆட்சிக்கு வந்தேயாக வேண்டும்.** கிராமம் கிராமமாக எமது பயணம் ஞானாச்சாரியாராக, குவலய குருபீடமாக, இந்துமதத் தந்தையாக, தமிழினக் காவல் தலைவராக, ... நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும். இதற்காக 30.12.85 முதல் சோ.இரவீந்திரன் உட்பட மாநிலச் செயலாளர்கள் சன்னிதான உடையில் செயல்பட ஆரம்பிக்கட்டும். மதுரை மாவட்டம் முழுதும் கொடியேற்றிக் கொள்கை முழக்கி அ.வி.தி.

நிலையங்களையும், இ.ம.இ. கிளைகளையும் தோற்றுவிக்கட்டும். **கருவாணை, குருவாணை, தருவாணை, திருவாணை, மருளாணை, அருளாணை**.

**அன்பு**

**குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**30.12.85.**

<u>நகல் தயாரித்தவர்</u>:-

அன்பு

M.R.சீனிவாசன் RMP, 90, தென்கள்ளர் தெரு, முசிறி, திருச்சி மாவட்டம். 6-1-1986.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: முசிறி சித்தரடியான் திரு M.R.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

1. [மதம்] சமயம் என்பது மனித நாகரிகத்தின் வரலாறு ஆகும்.
2. தெய்வீகமும் மருந்தும் மனிதனின் கண்கள்.
3. இதிகாசங்களும் புராணங்களும் மனித வாழ்வையும் வளர்ச்சியையும் பற்றிய பேருண்மைகளை விளக்கும் கலைக்களஞ்சியமாகும்.
4. அண்டப்பெருவெளியையும் வானவெளிப் பொருள்களையும் விளக்கும் தொல்பொருள் நிலையம் கோயில்.
5. [கடவுள் நம்பிக்கையும் மறுப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.] சமயவாதமும் பொருளியல் வாதமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.
6. ஏழைத் தொழிலாளிக்கு உதவுவதுதான் இறைவனுக்குச் செய்யும் உண்மையான தொண்டு.
7. **சமண மதம், புத்த மதம், கிறித்தவ மதம், இசுலாமிய மதம் ஆகிய நான்கும் சித்தர்களின் சித்தாந்தம் எனும் தேவாலயத்தின் நான்கு வாயில்கள்....**

*- சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களின் எழுத்துக்களாக 'சிந்திக்கலாமா?' என்ற நூலில் குருதேவர் வழங்கிய கருத்துக்கள்.*

# இந்துமதம் பற்றிய தவறான கருத்துக்களுக்கு வன்மையான கண்டிப்பும் வருத்தமும்.

அன்புள்ள ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் அவர்கள் சமூகத்திற்கு, 1985 ஏப்ரல் மாத இதழில் தங்களது கட்டுரையாக (இந்து மதம் அழைக்கிறது - பக்கம் 55-56); வெளிவந்துள்ள செய்திகளுக்கு, கருத்துக்களுக்கு வன்மையான கண்டனம் தெரிவித்து, உண்மையான பகுத்தறிவுப் பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்து, மதுரை வட்டார இ.ம.இ. உறுப்பினர்களான சித்தரடியான்கள், சித்தரடியார்கள், சித்தரடியாள்கள் விடுக்கும் அஞ்சல்.

சமயப் பெரியவர்கள், இயக்கங்கள், அற நிறுவனங்கள், பேச்சாளர்கள் அனைவருக்கும் இக்கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அனைவரும் சிந்தித்துப் பார்க்கவே எழுதப்படுகின்றது. முடியாவிட்டால் எங்களைச் சந்திக்கவாவது முற்படுங்கள்.

ஆசிரியர் அவர்களே!

(1) தாங்கள் அந்தக் கட்டுரையில் ***“நம் இந்து மதமோ அவ்விதம் ஏற்பட்டதன்று ... தொடங்கப் பட்டதன்று! ...”*** என்று எழுதியுள்ளீர்கள்.

இது மிகமிகத் தவறான கருத்தாகும். காரணமின்றிக் காரியமில்லை. செய்பவனின்றிச் செயலில்லை. இதைத் தாங்கள் எந்த அளவுக்குப் புரிகின்றீர்களோ, எங்களுக்குத் தெரியாது. எந்தப் புத்தகத்தைப்

படித்து இப்படியெல்லாம் எழுதி வருகின்றீர்கள் என்றும் எங்களுக்குத் தெரியவில்லை. அல்லது ஞான மிகுதியால் இப்படி எழுதுகிறீர்களா? தந்தையும் தாயுமின்றிப் பிள்ளை உருவாகுமா? ஆகவே யாராவது இந்து மதத்தை உருவாக்கி இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்! அதனால்தான் சொல்கிறோம்; எதையும் பகுத்தறிவுப் போக்கிலும், விஞ்ஞான நோக்கிலும், சூழலிலும் ஆராய்ச்சி செய்ய வேண்டும். தவறைத் திருத்திக் கொள்ளுங்கள் என வேண்டுகிறோம்.

தவறான, முரண்பாடான, அறிவுக்குப் புறம்பான செய்திகளைப் போட்டு பத்திரிகையின் பக்கங்களை நிரப்பாதீர்கள். இப்படி எழுதினால்தான் எங்களுக்குப் பத்திரிகை விற்கும்; பணம் வரும் என்று தாங்கள் நினைத்தால், அதற்கும் எங்களது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மூலப் பதினெண்சித்தர்களின் படைப்புத்தான் உண்மையான இந்துமதம். 43,73,086 ஆண்டுகளுக்கு முன் மணீசர்களுக்கு (மண் + ஈசன் = மணீசன்) வாழ்வியல் நெறியாக, வாழ்க்கைத் தத்துவமாக, சமூகவியலாக அண்டபேரண்டமாளும் அன்னைத் தமிழில் வழங்கப்பட்டதுதான் இந்து மதம். அது ஒரு அனுபவ சித்தாந்தம். (Practical thesis).

(The Pathinen Siddhars established INDUISM with rationalistic approach and scientific attitude.) மேலும் அறிய விரும்பினால் எங்களது இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கையைப் படித்துப் பாருங்கள்.

(2) ***“பாரத தேசம் பழம் பெரும் தேசம்” .... “இக்காலத்தில் இந்து மதம் என்று வழங்கப் படுகின்றது”*** ... (பக்கம் 55) என்று எழுதியுள்ளீர்கள்.

ஐயா! எப்படிப் பாரத தேசத்தைப் பழம் பெரும் தேசம் என்று குறிப்பிடுகின்றீர்களோ; அதேபோல்தான் தமிழ்மொழி மிக மிகப் பழமையான மொழி. அண்டபேரண்டமாளும் மொழி. அந்த தீந்தமிழின் சொல்தான் ‘இந்து’ என்பது. தாங்கள் சொல்லும் ‘சனாதனம்’ என்ற சமசுக்கிருதச் சொல், காலத்தால் மிகமிகக் குறைந்த வயதுள்ள மொழியின் சொல்லாகும். ஆகவே முன்னுக்குப் பின் முரணாக எழுதி எங்களைப் புண்படுத்தாதீர்கள். தாங்கள் சொல்கின்ற மதம் இந்து மதம் அல்ல. புராண இதிகாசப் புளுகுகள் நிறைந்த *ஹிந்துமதம்*தான். புரிய முற்படுங்கள்; உணர முற்படுங்கள்.

(3) ***“நம் மதத்துக்கு இந்துமதம் என்று பெயர் வைத்தவர்கள் மேனாட்டினர்; அதாவது வெளி நாட்டினர் .... இந்து மதம் என்று அழைத்தனர் ...”*** (பக்கம் 55).

ஆசிரியரே! கடந்த 1985ஆம் ஆண்டில் காஞ்சிச் சங்கராச்சாரியாரின் கருத்தாக வெளிவந்த அதே கருத்தைத்தான் தாங்கள் வெளியிட்டுள்ளீர்கள். அக்கருத்தை மறுத்தும், கண்டித்தும் நாங்கள் எழுதியுள்ள அஞ்சலை தயவு செய்து காஞ்சி சென்று படித்துப் பாருங்கள்.

பிறந்த பிள்ளைக்கு பெற்றோர்தான் பெயர் வைப்பார்கள். இது உலக வழக்கு. நாட்டு நடப்பு. இந்தியா என்று பெயர் வைக்கவோ, இந்துமதம் என்று நம் மதத்தை அழைக்கவோ எந்த மேனாட்டினருக்கும் தகுதியோ, தரமோ, திறமோ கிடையாது!

கிடையாது! கிடையாது! வெளிநாட்டினரின் வளர்ச்சி இன்றைக்கு 300 அல்லது 400 ஆண்டுகளுக்குள்தான். பல இலட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே அறிவியலிலும், அருளியலிலும் முன்னேறிய சமுதாயமாக இருந்து வந்ததுதான் இந்தியச் சமுதாயம். அதற்குக் காரணமாக இருந்தது இந்து மதம்.

தயவு செய்து மக்களைக் குழப்பாதீர்கள். இந்து மதத்தை அனுபவப் பூர்வமாக உணர முற்படுங்கள் என்று கூறி முடிக்கும்,

**அருள்மிகு தேவதானப்பட்டி தேவி காமாட்சி அம்மன் சன்னிதானம் வெ.செகதீசன்.**

**அருள்மிகு திருப்பரங்குன்றம் அன்னபூரணி சன்னிதானம் செ.கார்த்திகேயினி.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: மதுரைச் சித்தரடியார் திரு வெ.செகதீசன் அவர்களின் கையெழுத்தில் இருந்த நகல்.//**

# போலியான இந்து வாழ்க்கை ஏன்?

“.....‘தூங்குகிறவர்களை எழுப்பலாம்; ஆனால், தூங்குகிற மாதிரி நடிக்கிறவர்களை எழுப்ப முடியாது’ என்ற மூதுரை போல், பெரும்பாலான இந்துக்கள்; தாங்கள் இந்துக்களாக வாழுவதாக கற்பனை செய்து கொண்டு; கனவு கண்டு கொண்டு போலியான இந்து வாழ்க்கையை வாழுகிறார்கள். இவர்களைத் திருத்துவதுதான் அரிது! அரிது!! அரிது!!!... சிரமம்! சிரமம்!! சிரமம்!!! ஏனெனில், இன்றைக்கு இந்துமதத்தின் பெயராலுள்ள அரசியல் கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், சபைகளும் சரி; சமய சமுதாய கலை இலக்கியக் கட்சிகளும், கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும் சரி..... பெரும்பாலும் இந்துமதத்தைத் தெரியாதவர்களாக, அறியாதவர்களாக, புரியாதவர்களாக, முழுமையாக நம்பாதவர்களாக, ஆழமான பிடிப்போ, பற்றோ, ஈடுபாடோ இல்லாதவர்களாக ... இருப்பவர்களால்தான் நடத்தப் படுகின்றன! நடத்தப்படுகின்றன!! நடத்தப்படுகின்றன!!! நடத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன! இதுதான் உண்மை!.....”

“..... அதாவது, நமது இந்துக்கள், மாநிலங்களின் பெயராலும், வட்டாரங்களின் பெயராலும், மொழிகளின் பெயராலும், இனங்களின் பெயராலும், அகப் பண்பாட்டு வேறுபாடுகளின் பெயராலும், புற நாகரீக வேறுபாடுகளின் பெயராலும் ... ஒருவரோடொருவர் மறைமுகமாகவும், நேரடியாகவும் போட்டி பொறாமைகளை வளர்த்துக் கொண்டு, ஒருவருக்கு மற்றவர் சவால் விட்டுக் கொண்டு, ஒருவர் மற்றவரைப் பார்த்து உறுமிக் கொண்டு, ஒருவர் மற்றவருக்கெதிராக சூழ்ச்சிகளைச் செய்து கொண்டு, ஓய்வு ஒழிவின்றி (சதா சர்வகாலமும்), தொடர்ந்து எப்பொழுதும் சண்டை சச்சரவுகளை வளர்த்துப் போரைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறார்கள்.... ???.....”

***- குருதேவர் அவர்கள் 1995இல் எழுதிய ஒரு அஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட பத்திகள்.***

**“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”**



“... **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவர் புதுமை விரும்பி, புரட்சிச் சிந்தனையாளர், சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுப் பகலவன், அறியாமை இருளகற்றும் ஆதவன், சிறந்த வரலாற்றுப் பேராசிரியர், புதிய அரசியல் தத்துவங்களை உருவாக்கிய அரசியல்வாதி, தீவிரமான சமுதாயச் சீர்திருத்தவாதி, சமயத்தின் பெயரால் உள்ள மடமைகளைச் சாடிடும் துணிவு மிக்க புரட்சிவாதி; போர்க்கலையில் திறமையும், உடல் வலிமையும் மிக்க மாவீரர், ...”

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org

*Email:* indhuism@gmail.com